Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ்
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 229 உள்ளூர் - 17.08.2026 திங்கட்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 229 வெளியூர் - 18.08.2026 செவ்வாய்க்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**அனுமன் அருள் பொழியும் ராசிகள்!** | **விளையாட்டு வீரர்களே... 85 காலியிடங்கள்!** | **கோவில் நிலங்களில் மெகா சோலார் திட்டம்!** | **சினிமாவிலிருந்து ஓய்வு - திரிஷா?**

## விஜய் அரசின் 100 நாள் சாதனைகள்!

சென்னை, ஆக. 17–

தவெக அரசின் 100 நாள் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டு முதல்வர் விஜய் வீடியோ வெளியீட்டுள்ளார்; அவர், '100 நாள் ஆட்சி ஒரு யுகத்திற்கான மக்களின் மனசாட்சி' என தெரிவித்துள்ளார்.




100 நாள் ஆட்சி; ஒரு யுகத்திற்கான மக்களின் மனசாட்சி என குறிப்பிட்டு முதல்வர் விஜய் பட்டியலிட்டுள்ள அரசின் திட்டங்கள் பின்வருமாறு:

* சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை
* தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் ரூ.560 கோடி ஒதுக்கீடு
* வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு 2026 – ரூ.1 லட்சம் கோடி முதலீடு
* 717 மதுபானக் கடைகள் மூடல்
* வெற்றித் திறன் பயிற்சித் திட்டம் 12 லட்சம் மாணவர்களுக்கும், 1 லட்சம் இளைஞர்களுக்கும் திறன் பயிற்சிகள்
* TN–VETTRI (கிராமப்புற மறுமலர்ச்சி) சுகாதாரம், குடிநீர், சாலைகள் மேம்படுத்த ஆண்டிற்கு ரூ.6,000 கோடி ஒதுக்கீடு
* போதைப் பொருள் ஒடுக்குவதற்கான 65 சிறப்பு அதிரடிப்படைகள்
* அண்ணனின் சீர் திருமண நன்னாளில் 8 கிராம் தங்க நாணயம், ஒரு பட்டுப் புடவை வழங்கப்படும் ரூ.812 கோடி ஒதுக்கீடு
* கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4,000, நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,750 சிறப்பு ஊக்கத்தொகை
* வெற்றி வீடு திட்டம் ரூ.3,500 கோடி ஒதுக்கீடு
* வெற்றி 150 –150 நாட்கள் உத்தரவாத வேலைவாய்ப்பு
* வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்புத் திட்டம்
* 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம்
* பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் ரூ.710 கோடி ஒதுக்கீடு
* விவசாயிகளுக்கு ரூ.6,000 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி
* வெற்றி மடிக்கணினித் திட்டம் ரூ.2,000 கோடி ஒதுக்கீடு
* அரசு மற்றும் அரசு உதவி பெறும் 11–ம்வகுப்புப்பயிலும்மாணாக்கர்களுக்கு ஹெல்மெட் மற்றும் வாட்டர் பாட்டில் வசதிகளுடன் கூடிய நவீன பிராண்டட் மிதிவண்டிகள்
* வெளிப்படையான & நேர்மையான நிர்வாகம் பல அடுக்குமாடி கட்டடங்களுக்கு CMDA அளவிலேயே திட்ட அனுமதி, நேரடி தொடர்பற்ற பத்திரப் பதிவு

## ரூ. 75,000 வரையிலான பயிர்க்கடன் தள்ளுபடி! முதல்வர் விஜய் அறிவிப்பு!

சென்னை, ஆக. 17–

கூட்டுறவு வங்கிகளில் ரூ. 75,000 வரையிலான விவசாயிகளின் பயிர்க்கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்யபடுவதாக பேரவையில் முதல்வர் விஜய் அறிவித்தார்.



பேரவையில் 110 விதியின் கீழ் பேசிய முதல்வர் விஜய்,

"மக்கள் எங்கள் உயிர் என்றால் விவசாயிகள் உயிர்நாடி. எந்தவொரு நாடு விவசாயிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்குகிறதோ, அந்த நாடு வளமுடன் செழிப்புடன் இருக்கும்.

அதன்படி தவெக அரசு பதவியேற்ற வுடன் 15 நாள்களுக்குள் குறு, சிறு விவசாயிகள் பயிர்க்கடன் தள்ளுபடி செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது.

பின்னர் விவசாய அமைப்புகளிடம் இருந்து கருத்துகள் பெற்று பயிர்க்கடன் தள்ளுபடிக்கான வரம்பு உயர்த்தப் பட்டது. இந்நிலையில் பயிர்க்கடன் தள்ளுபடியை முழுவதுமாக வழங்கக் கோரிய விவசாயிகளின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டன. அதன்படி இப்போது கூட்டுறவு வங்கிகள் மூலம் பெறப்பட்டுள்ள விவசாயிகளின் பயிர்க்கடன் ரூ. 75,000 வரை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படுகிறது.

ரூ. 75,000 வரை பயிர்க்கடன் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படுகிறது. ரூ. 75,000 முதல் 1 லட்சம் ரூபாய் வரையிலான பயிர்க்கடனுக்கு ரூ. 75,000 மட்டும் தள்ளுபடி செய்யப்படுகிறது.இதனால் கூடுதலாக 2 லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

ஒரு லட்சத்திற்கு மேல் பயிர்க்கடன் பெற்றவர்களுக்கு ரூ. 35,000 தள்ளுபடி வழங்கப்படும்.

அரசுக்கு கடுமையான நிதிச்சுமை இருந்த போதிலும் இந்த கூடுதல் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ரூ. 953.06 கோடி கூடுதல் சுமை ஏற்படும்" என்றார்.

## காவிரி நீர் விவகாரம்: கர்நாடகாவுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஆக. 17–

தமிழகத்திற்கு காவிரி நீர் திறந்துவிடுவது தொடர்பாக காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை கர்நாடகா கட்டாயம் பின்பற்ற வேண்டும் என உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்திற்கு உரிய நீரை கர்நாடகா திறந்துவி டவில்லை எனக் கூறி தமிழக அரசு தொடர்ந்த வழக்கு, நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு தரப்பில், கர்நாடக அணைகளில் 76% நீர் இருப்பு இருந்தும், ஆணைய உத்தரவுப்படி வழங்க வேண்டிய 64 டிஎம்சி நீரில் 14 டிஎம்சி மட்டுமே திறக்கப்பட்டுள்ளதாக வாதிடப்பட்டது.

கர்நாடகா தரப்பில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுவதாகவும், விதிமுறைகளை மீறவி ல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.



இரு மாநிலங்களும் தாக்கல் செய்த தற்போதைய நிலவர அறிக்கைகளை ஆய்வு செய்ய உள்ளதாக நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும், அடுத்த ஒரு வாரத்திற்கு காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்துள்ள உத்தரவை கர்நாடகா பின்பற்ற வேண்டும் என உத்தரவிட்டனர்.

வழக்கு விசாரணை ஆகஸ்ட் 24ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## அயோத்தி ராமர் கோயிலில் அர்ச்சகர்களுக்கு மஞ்சள் நிற உடை கட்டாயம்!

அயோத்தி, ஆக. 17–

அயோத்தி ராமர் கோயில் அர்ச்சகர்களுக்கான புதிய உடை விதிமுறை கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமலுக்குவந்துள்ளது. இதன்படி, பூஜைகள் மற்றும் வழிபாட்டு நிகழ்ச்சிகளை நடத்தும் அனைத்து அர்ச்சகர்களும் பாரம்பரிய மஞ்சள் நிற உத்தரீயம் (மேலாடை) அணிய வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



## சினிமாவிலிருந்து ஓய்வு - திரிஷா?

சென்னை, ஆக. 17–

நடிகை த்ரிஷா சினிமாவிலிருந்து ஓய்வெடுக்கும் திட்டத்தில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



நடிகை த்ரிஷா நடிப்பில் கடந்த 2025 ஆம் ஆண்டு தக் லைஃப், விடாமுயற்சி, குட் பேட் அக்லி, ஐடெண்டிட்டி ஆகிய திரைப்படங்க ள் வெளியாகின. தொடர்ந்து, இந்தாண்டு நடிகர் சூர்யாவுடன் நடித்த கருப்பு திரைப்படம் வெளியாகி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. மேலும், கர்ஜனை மற்றும் சதுரங்க வேட்டை – 2 ஆகிய திரைப்படங்கள் வெளியாகவுள்ளன.

இந்தாண்டு இறுதியில் இயக்குநர் ஜீத்து ஜோசப் இயக்கத்தில் நடிகர் மோகன்லாலுடன் நடித்த ராம் திரைப்படமும் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, த்ரிஷா நடித்த தெலுங்கு படமான விஸ்வம்பரா படமும் வெளியாகக் காத்திருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக ஆண்டிற்கு சில திரைப்படங்களில் ஒப்பந்தமான த்ரிஷா, ஆட்சி மாற்றத்திற்குப் பின் புதிய திரைப்ப டங்களில் ஒப்பந்தமாவதைத் தவிர்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்பு ஒப்புக்கொண்ட திரைப்படங்களில் மட்டும் நடித்துவிட்டு சினிமாவிலிருந்து கொஞ்ச காலம் ஓய்வெடுக்கத் த்ரிஷா திட்டமிட்டுள்ளதாகவும் பேசப்பட்டு வருகிறது. மேலும், த்ரிஷா தயாரிப்புத் துறையில் இறங்கலாம் என்றும் தகவல் கசிந்துள்ளது.


## LPG இறக்குமதிக்கு அதிரடி 'செக்'!

# ஒவ்வொரு நிறுவனத்துக்கும் இலக்கு! இந்தியாவிலேயே 70% LPG தயாரிப்பு!

## ரிலையன்ஸுக்கு 18,000 டன் இலக்கு!

புதுடெல்லி, ஆக. 17–

இந்தியாவின் LPG இறக்குமதி சார்பை குறைத்து, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு புதிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. நாட்டில் உள்ள பொதுத்துறை மற்றும் தனியார் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்க ளுக்கு முதன்முறையாக தனித்தனியாக LPG உற்பத்தி இலக்கு நிர்ணயிக்க ப்பட்டுள்ளது. மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் உத்தரவின்படி, இந்தியாவில் உள்ள 21 சுத்திகரிப்பு ஆலைகள் மற்றும் அப்ஸ்ட்ரீம் நிறுவனங்களுக்கு அவற்றின் உற்பத்தித் திறன் மற்றும் கட்டமைப்புக்கு ஏற்ப இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.



இதன்படி, நாடு முழுவதும் தினசரி 63,810 டன் LPG உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தற்போது இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அளவை விட குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகும். இந்த இலக்கு முழுமையாக நிறைவேற்றப்பட்டால், இந்தியாவின் தினசரி LPG தேவையில் சுமார் 70 சதவீதத்தை உள்நாட்டிலேயே பூர்த்தி செய்யமுடியும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புதிய திட்டத்தில், நாட்டின் மிகப்பெரிய சுத்திகரிப்பு ஆலையை கொண்டுள்ள ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீ ஸுக்கு சுமார் 18,000 டன் LPG உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போது இந்தியா தனது LPG தேவையில் சுமார் 64 சதவீதத்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகிறது. 2026 நிதியாண்டில் இந்தியாவின் LPG பயன்பாடு சுமார் 33.2 மில்லியன் டன்னாக இருந்த நிலையில், அதில் 13.1 மில்லியன் டன் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதாகவும், 21.3 மில்லியன் டன் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளைகுடா பகுதியில் பதற்றம் அதிகரிக்கும் சூழலில், LPG விநியோகத்தில் வெளிநாட்டு சார்பை குறைப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் இறக்குமதி செலவு, டாலர் செலவினம் மற்றும் விநியோக அபாயங்களை குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அடுத்த 5 ஆண்டுகளில் பயோகேஸ் உற்பத்தியையும் அதிகரித்து, நாட்டின் மொத்த எரிசக்தி தேவையில் 5 முதல் 7 சதவீதம் வரை அதன்மூலம் பூர்த்தி செய்ய மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது.

## டாடா சன்ஸ் கூட்டத்துக்கு 'செக்'!ஆக.18-ல் என்ன நடக்கும்?

புதுடெல்லி, ஆக. 17–

டாடா சன்ஸ் தலைவர் என். சந்திரசேகரனின் ராஜினாமாவைத் தொடர்ந்து, அந்நிறுவனத்தின் நிர்வாகத்தில் அடுத்தடுத்து பரபரப்பான திருப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில், டாடா சன்ஸ் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரரான சர் ரத்தன் டாடா டிரஸ்ட் நிர்வாக முடிவுகளில் ஈடுபடுவதற்கு மகாராஷ்டிரா அறக்கட்டளை ஆணையர் கட்டுப்பாடு விதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால், ஆகஸ்ட் 18–ம் தேதி நடைபெறவிருந்த ஏஜிஎம் கூட்டத்தில் டிரஸ்ட் சார்பில் பிரதிநிதிகள் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.



இதன் காரணமாக கூட்டம் திட்டமிட்டபடி நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இதுகுறித்து டாடா சன்ஸ் நிறுவனம் இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடவில்லை. இந்தக் கூட்டத்தில் புதிய தலைவரைத் தேர்வு செய்வதற்கான 5 பேர் கொண்ட குழு அமைப்பது உள்ளிட்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம்என எதிர்பார்க்கப்பட்டது.

சந்திரசேகரன் மீண்டும் இயக்குநராக நியமிக்கப்படாவிட்டால், இடைக்கால தலைவரை நியமிக்க வேண்டிய சூழல் உருவாகலாம். இதில் நோயல் டாடா பெயரும் பரிசீலனையில் இருப்பதாக கூறப்படுகிறது.

## இந்தோனேசியா நிலநடுக்கம்: பலி எண்ணிக்கை 53-ஆக உயர்வு!

இந்தோனேசியா, ஆக. 17–

கிழக்கு இந்தோனேசியாவில் 7.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்ட மறுநாளான ஞாயிற்றுக்கிழமை யன்று, மீட்புக் குழுவினர் மேலும் ஆறு உடல்களை மீட்டனர்; இதனால் பலி எண்ணிக்கை 53–ஆக உயர்ந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், நிலநடுக்க த்திற்கு பிந்தைய அதிர்வுகள் குறித்த அச்சத்தால் பலர் இரவு முழுவதும் திறந்தவெளியில் தங்கினர்.



முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இந்நாட்டின் கத்தோலிக்கர்கள் அதிகம் வசிக்கும் 'ஃப்ளோரஸ்' தீவில் உள்ள ஆறு மாவட்டங்களில், நிலநடுக்க த்தால் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கியவர்களை தேடி மீட்புக் குழுவினர் இடிபாடுகளை அகற்றினர்.

நிலநடுக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட மங்கராய், கிழக்கு மங்கராய் மற்றும் நாகேகியோ ஆகிய மூன்று மாவட்டங்களில் மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன; ஏனெனில் இப்பகுதிகளைச் சென்றடைவது கடினமாக இருந்தது.

"நாங்கள் பெரும்பாலான நிலச்சரிவு களை அகற்றி, தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களுக்கான சாலைகளை மீண்டும் திறந்துள்ளோம். இருப்பினும், தகவல் தொடர்பு மற்றும் மின்சார விநியோகத் தடைகள் தேடுதல் பணிகளுக்குத் தொடர்ந்து இடையூறாக உள்ளன," என்று சிக்கா மாவட்டத்தின் தலைநகரான மௌமேரேவில் உள்ள தேடுதல் மற்றும் மீட்புப் பிரிவு அலுவலகத்தின் தலைவர் ஃபதுர் ரஹ்மான் கூறினார்.

கிழக்கு நுசா தெங்காரா மாகாணத்தில் 900–க்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும், 450 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்தன. இதனால் சுமார் 5,000 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஃப்ளோரஸ் பகுதியில் மட்டும் குறைந்தது 241 வீடுகள் சேதமடைந்ததாக தேசிய பேரிடர் மேலாண்மை முகமையின் பேரிடர் தடுப்புப் பிரிவுத் தலைவர் அப்துல் முஹாரி தெரிவித்தார்.

சனிக்கிழமை உள்ளூர் நேரப்படி காலை 6 மணிக்குச் சற்று முன்னதாக, 10 கி.மீ ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் (USGS) தெரிவித்துள்ளது. சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு பின்னர் திரும்பப் பெறப்பட்டதால், மக்கள் பீதியடைந்து வெளியேறினர்.

நிலநடுக்கத்திற்குப் பிறகு குறைந்தது 995 அதிர்வுகள் பதிவாகியுள்ளன, ஆனால் அவற்றில் 46 அதிர்வுகள் மட்டுமே மக்களால் உணரப்பட்டன என்று முஹாரி கூறினார்; மேலும் இதில் 135 பேர் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 17.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 32-ம் தேதி

## GCC நிறுவனங்களில் ஊழியர் பற்றாக்குறை!




இந்தியாவில் வெளிநாட்டு நிறுவனங்களின் GCC எனப்படும் Global Capability Centres வேகமாக விரிவடைந்து வரும் நிலையில், திறமையான ஊழியர்களுக்கு கடும் தேவை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக AI, டிஜிட்டல் மாற்றம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் திறமையான பணியாளர்கள் கிடைப்பதில் நிறுவனங்கள் சிக்கலை எதிர்கொள்கின்றன. இதனால் பல நிறுவனங்களின் திட்டங்கள் காலதாமதமாகி, செலவுகளும் அதிகரித்து வருகின்றன.

சமீபத்திய ஆய்வின்படி, சுமார் 10 GCC நிறுவனங்களில் 6 நிறுவனங்கள் திறன் பற்றாக்குறையால் திட்டங்கள் மற்றும் புதிய தயாரிப்புகளின் செயல்பாட்டில் தாமதத்தை சந்திப்பதாக தெரிவித்துள்ளன. மேலும், 54 சதவீத நிறுவனங்கள் AI மற்றும் டிஜிட்டல் மாற்றத் துறைகளில் திறன் பற்றாக்குறை இருப்பதாக கூறியுள்ளன.

திறமையான பணியாளர்களை ஈர்க்க, வெளி நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்த நிறுவனங்கள் மூலம் அதிக சம்பளத்தில் ஊழியர்களை நியமிக்கும் நிலையும் உருவாகியுள்ளது. இதனால் தேவையான திறன்களை வளர்த்துக் கொண்டுள்ள IT ஊழியர்களுக்கு வேலை மாறவும், அதிக ஊதியம் பெறவும் சாதகமான சூழல் உருவாகியுள்ளது.

AI, டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்ட வளர்ந்து வரும் துறைகளில் திறனை மேம்படுத்திக் கொள்பவர்களுக்கு GCC நிறுவனங்களில் சிறந்த வேலைவாய்ப்பு கதவுகளைத் திறக்கக்கூடும்.

# 2029 நாடாளுமன்றத் தேர்தலில் மாற்றத்தை விரும்பும் 64 கோடி வாக்காளர்கள்: அண்ணாமலை!



சென்னை, ஆக. 17–
'வீ தி லீடர்ஸ்' அமைப்பின் சார்பில், ஆகஸ்ட் மாதத்தைச் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மாதமாகக் கடைப்பிடிப்பதன் ஒரு பகுதியாக, சென்னையில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தி பிரம்மாண்ட விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்த அமைப்பின் நிறுவனர் அண்ணாமலை தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் பொது மக்களும் திரளாக பங்கேற்றனர்.

பேரணியின் நிறைவில் நடைபெற்ற விழிப்புணர்வு கூட்டத்தில் பேசிய அண்ணாமலை, நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான வாக்காளர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். இந்திய அரசியல் களம் அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி நகர்ந்து வரும் நிலையில், வரவிருக்கும் 2029 நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் குறித்த அண்ணாமலையின் கணிப்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.

செய்தியாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே உரையாற்றிய அண்ணாமலை, 2029–ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் கிட்டத்தட்ட 64 கோடி வாக்காளர்கள் பெரும் மாற்றத்தை விரும்புவார்கள் என்று குறிப்பிட்டார். நாட்டின் தற்போதைய அரசியல் சூழல், மக்களின் தேவைகள் மற்றும் எதிர்காலக் கனவுகளை மையமாகக் கொண்டு வாக்காளர்கள் தங்களது தீர்ப்பை அளிப்பார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். பாரம்பரிய அரசியல் வழிகளிலிருந்து விலகி, வெளிப்படைத்தன்மை மற்றும் தொலைநோக்குக் பார்வை கொண்ட தலைமைக்கே மக்கள் முன்னுரிமை அளிப்பார்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

இளைஞர்கள் மற்றும் புதிய வாக்காளர்களின் பங்களிப்பு இந்த மாற்றத்தில் மிக முக்கியமான காரணியாக இருக்கும் என்று குறிப்பிட்ட அவர், 2029 தேர்தல் இந்திய அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் என உறுதியாகத் தெரிவித்தார்.

# டாஸ்மாக் முறைகேடு வழக்கு: ஐபிஎஸ் அதிகாரியின் சகோதரருக்கு லுக் அவுட் நோட்டீஸ்!




சென்னை, ஆக. 17–
'டாஸ்மாக்' நிறுவனத்தில் 2021 முதல் 2025–ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் நடைபெற்றதாக கூறப்படும் முறைகேடு தொடர்பாக சென்னை லஞ்ச ஒழிப்பு போலீசார் கடந்த மாதம் 28–ந்தேதி வழக்குப்பதிவு செய்தனர்.

இதில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, 'டாஸ்மாக்' முன்னாள் மேலாண்மை இயக்குநர் விசாகன், 'டாஸ்மாக்' அதிகாரிகள் ராமதுரை முருகன், பன்னீர்செல்வம், பாஸ்கர் மற்றும் செந்தில் பாலாஜியுடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததாக கூறப்படும் ரதேஷ், கார்த்திக், ரமேஷ் உள்ளிட்டோர் பெயர்கள் இடம் பெற்றது.

இந்த வழக்கில் மதுபான உற்பத்தி ஆலைகள், சரக்கு உரிமம் பெற்ற நிறுவனங்கள், பாட்டில் நிறுவனங்கள் மற்றும் அடையாளம் தெரியாத 'டாஸ்மாக்' ஊழியர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக தமிழகம் முழுவதும் 45 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினார்கள். இதில் முக்கிய ஆவணங்கள் மற்றும் மின்னணு ஆதாரங்கள் சிக்கின. அதன் அடிப்படையில் இந்த வழக்கில் கரூரைச் சேர்ந்த கார்த்திக், ரமேஷ் உள்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் செந்தில் பாலாஜி முன் ஜாமீன் பெற்றுள்ளார். இந்த வழக்கில் தொடர்புடைய ஐபிஎஸ் அதிகாரியின் சகோதரரான ரதேஷை போலீசார் தேடி வருகிறார்கள். அவர் வெளிநாடு தப்பிச் செல்வதை தடுக்கும் வகையில் அனைத்து விமான நிலையங்களுக்கும் 'லுக்–அவுட்' நோட்டீசை லஞ்ச ஒழிப்பு போலீசார் வழங்கி உள்ளனர்.



## அனுமன் அருள் பொழியும் ராசிகள்! சவால்கள் வெற்றியாகும்!



சிவபெருமானின் 11–வது அவதாரமாக ஆஞ்சநேயர் கருதப்படுகிறார். சாவான் மாதம் சிவ வழிபாட்டிற்கு சிறப்பு வாய்ந்த காலமாக பார்க்கப்படுகிறது. இந்த மாதத்தில் ஆஞ்சநேயரை வழிபடுவதன் மூலம் தைரியம், மனவலிமை அதிகரித்து, தடைகள் விலகும் என்பது ஜோதிட நம்பிக்கை. குறிப்பாக மேஷம், சிம்மம், விருச்சிகம், மகரம் உள்ளிட்ட 5 ராசியினருக்கு இந்த காலகட்டம் சாதகமாக அமையக்கூடும் என ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

**மேஷம்:** செவ்வாயின் ஆதிக்கத்தால் தைரியம் அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட்டால் பயணங்கள், புதிய முயற்சிகள் மற்றும் பணிகளில் வெற்றி கிடைக்கலாம். அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** கடினமான பணிகளையும் சிறப்பாக செய்து முடிக்கும் ஆற்றல் கிடைக்கும். புத்திசாலித்தனமான அணுகுமுறையால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். நண்பர்களின் ஆதரவும் சமூகத்தில் மதிப்பும் அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்:** செயல்களில் சில ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும், தடைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது. எடுத்த காரியங்களை முழு ஈடுபாட்டுடன் செய்வது நல்ல பலனைத் தரும்.

**மகரம்:** நிதி சிக்கல்கள் குறையக்கூடும். வருமானத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகள் பலன் தரும். தொழிலை விரிவுபடுத்த கடன் அல்லது நிதியுதவி கிடைக்க வாய்ப்பு உள்ளது. குடும்பத்திலும் ஒற்றுமை அதிகரிக்கும்.

இந்த காலத்தில் கோபம், அவசரம் ஆகியவற்றைத் தவிர்த்து நிதானமாகச் செயல்படுவது முக்கியம். ஆஞ்சநேயரை நம்பிக்கையுடன் வழிபட்டு, தொடர்ந்து முயற்சி செய்தால் சவால்களை வெற்றியாக மாற்ற முடியும் என்பது ஜோதிட நம்பிக்கையாகும்.

## சினிமா துளிகள்..!

### விஜய் வழியில் யாஷ்?



'கேஜிஎஃப்' படங்கள் மூலம் இந்திய அளவில் பிரபலமான கன்னட நடிகர் யாஷ், தற்போது 'ராமாயணம்', 'டாக்சிக்' உள்ளிட்ட படங்களில் கவனம் செலுத்தி வருகிறார்.'ஆப் கி அதாலத்' நிகழ்ச்சியில் பங்கேற்ற அவரிடம், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யைப் போல எதிர்காலத்தில் அரசியலுக்கு வருவீர்களா? என கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த யாஷ், "மக்களுக்காக முடிவெடுத்து, அவர்களுக்காக பணியாற்றுவதுதான் அரசியலின் முக்கிய நோக்கம்" என்றார். எதிர்காலத்தில் அரசியலுக்கான தேவை ஏற்பட்டால், அதில் நுழைவதற்கான வாய்ப்பை மறுக்கவில்லை என்றும் தெரிவித்தார். ஆனால், தற்போது அரசியலுக்கு வர வேண்டிய அவசியம் இல்லை என்றும், நடிகராக செய்ய வேண்டிய பணிகள் இன்னும் நிறைய இருப்பதாகவும் யாஷ் தெளிவுபடுத்தினார்.கன்னட சினிமாவை மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதே தற்போதைய தனது முக்கிய இலக்கு என்றும் அவர் கூறியுள்ளார்.இதனால் யாஷின் அரசியல் வருகை குறித்த ரசிகர்களின் எதிர்பார்ப்பு மீண்டும் அதிகரித்துள்ளது.

### இலங்கையில் முதன்முறையாக தமிழ் படத்தின் இசை வெளியீடு!




இந்தியத் தமிழ் திரைப்படமான "நல்லபடம்" படத்தின் இசை வெளியீட்டு விழா வரும் ஆகஸ்ட் 22–ம் தேதி கொழும்பு போர்ட் சிட்டியில் நடைபெறும் "வேர்ல்ட் ஆஃப் ராவண்" இசைத் திருவிழாவின் பிரமாண்ட மேடையில் நடைபெறுகிறது.

இலங்கையில் இந்தியத் தமிழ் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெறுவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரிஷ் சினிமாஸ் சார்பில் ஏ. அழகு பாண்டியன் தயாரிக்கும் இப்படத்தில் டாக்டர் ஏ. ஹரிஷ், தனலட்சுமி ஆகியோர் கதாநாயகன், கதாநாயகியாக நடித்துள்ளனர். மொட்டை ராஜேந்திரன், கல்கி ராஜா, ரமா உள்ளிட்டோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

"கெட்டவன்னு பேரெடுத்த நல்லவன்டா" படத்தை இயக்கிய சி. பிரபுராம் இப்படத்தை இயக்கியுள்ளார்.

# கோவில் நிலங்களில் மெகா சோலார் திட்டம்!



சென்னை, ஆக. 17–
தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பயன்பாடின்றி காலியாக கிடக்கும் கோவில் நிலங்களில் சூரிய மின் உற்பத்தி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்கான கொள்கை அளவிலான ஒப்புதல் கடந்த மாதம் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, மாநிலம் முழுவதும் ஒரே இடத்தில் 10 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவில், விவசாய பயன்பாடின்றி உள்ள கோவில் நிலங்களை உடனடியாக கண்டறிந்து விவரங்களை அனுப்புமாறு அனைத்து மண்டல இணை ஆணையர்களுக்கும் அறநிலையத்துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார். தேர்வு செய்யப்படும் நிலங்களில் சோலார் மின் தகடுகள் அமைக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்படும். இதன் மூலம் கோவில்களுக்கு தொடர்ந்து வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கோவில் நிலங்கள் பயன்பாட்டில் இருப்பதுடன், அவற்றை ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக்கவும் இந்தத் திட்டம் உதவும் என கூறப்படுகிறது.

இதற்கிடையே, கோவில் நிலங்கள் அனைத்தையும் முறையாக அளவீடு செய்து, எல்லைகளை உறுதி செய்து வேலி அமைத்து பாதுகாக்கவும் அதிகாரிகளுக்கு அறநிலையத்துறை அறிவுறுத்தியுள்ளது.



திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், காரையாறு வனப்பகுதியில் உள்ள சின்னமயிலாறு காணிக்குடி பகுதியைச் சேர்ந்த காணி பழங்குடியினரின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, மோட்டார் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனந்த் மோகன் நேரில் சென்று பயனாளிக்கு வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ச.வித்யா , சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ஆயுஸ் குப்தா உட்பட பலர் உள்ளார்கள்.



ஈரோடு பொதுப்பணித்துறை கீழ்பவானி பாசனகோட்ட அலுவலகத்தில் நாட்டின் 80 –ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அலுவலக வளாகத்தில் உள்ள கம்பத்தில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பாலமுருகன் தேசியக்கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் உதவி செயற்பொறியாளர்கள் மா.ஜெகதீஷ், உதயகுமார், உதவி பொறியாளர்கள் ஜெயச்சந்திரன், குமார், விஜயராகவன், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

## ஒத்திவாக்கம் ஸ்ரீ செல்லியம்மன் ஸ்ரீ செங்கழனி அம்மன் திருக்கோயிலில்

# 24-வது ஆண்டு தீமிதி திருவிழா சிறப்பாக நடைபெற்றது





செங்கல்பட்டு, ஆக. 17–
செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், ஒத்திவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தீப்பாஞ்சம்மன், ஸ்ரீ பழண்டியம்மன், ஸ்ரீ செல்லியம்மன், ஸ்ரீ செங்கழனி அம்மன் திருக்கோயிலின் 24–வது ஆண்டு தீமிதி திருவிழா ஆகஸ்ட் 16–ஆம் தேதி வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஆடி மாதம் 31–ஆம் தேதி, சதுர்த்தி திதி, அஸ்த நட்சத்திரம் மற்றும் அமிர்த யோகம் கூடிய சுபநாளில் நடைபெற்ற இவ்விழாவில், மாலை 6.30 மணியளவில் தீமிதி திருவிழா மற்றும் ஊஞ்சல் சேவை நடைபெற்றது.

இதையொட்டி ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து நடைபெற்ற தீமிதி நிகழ்ச்சியில் பக்தர்கள் பக்தி பரவசத்துடன் கலந்து கொண்டு தீ மிதித்து நேர்த்திக்கடனை செலுத்தினர்.

விழாவில் ஒத்திவாக்கம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்து அருள்பெற்றனர். பக்தர்களின் வசதிக்காக ஆலய நிர்வாகக் குழுவினர் மற்றும் கிராம பொதுமக்கள் சார்பில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும், விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய பக்தர்கள், பொதுமக்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு ஆலய நிர்வாகக் குழுவினர் நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.




ஈரோடு யூ ஆர் சி பழனியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 28 வது "ஸ்போர்ட்ஸ் டே" மற்றும் 80–வது சுதந்திர தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பாரதியார் பல்கலைக்கழகம் முன்னாள் பதிவாளர் டாக்டர், முருகவேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டி பேசினார். இந்த நிகழ்ச்சியில் யூ ஆர் சி பள்ளியின் தலைவர் துளசி அம்மாள், துணைத் தலைவர் கனகசபாபதி, பள்ளியின் தாளாளர் சரஸ்வதி அம்மாள், அறக்கட்டளை உறுப்பினர்கள் அபிராமி குகன், சுருதி சக்தி அனீஸ், மாஸ்டர் பிரனவ், ஹர்த்தியா, முதல்வர் ஆர் விஜயலட்சுமி, துணை முதல்வர் டி சுரேஷ், மற்றும் ஜமுனா, அன்பரசு பிரியதர்ஷினி, ஆகியோர் கலந்து கொண்டனர். விழா முடிவில் யூ ஆர் சி பள்ளி நிர்வாக அலுவலர் லோகநாதன் நன்றி கூறினார்.



திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக் கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க சிறு புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

### 27 வயதில் நடிகை அனன்யா ராஜ் மரணம்




இந்தி திரைப்படங்களில் நடித்த இளம் நடிகை அனன்யா ராஜ் (27) காலமானார். கடந்த ஓராண்டுக்கும் மேலாக உடல் மற்றும் மனரீதியான பிரச்சினைகளுடன் போராடி வந்த அவர், ஜூலை 15–ம் தேதி அதிகாலை தூக்கத்திலேயே உயிரிழந்ததாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

'7 ஹவர்ஸ் டு கோ', 'தி ஃபைனல் எக்சிட்', 'கோஸ்ட்' உள்ளிட்ட படங்களில் நடித்த அனன்யா, தெலுங்கு மற்றும் தமிழ் திரைப்படங்களிலும் பணியாற்றியுள்ளார். அவரது மறைவுச் செய்தியை ஆகஸ்ட் 16–ம் தேதி குடும்பத்தினர் சமூக வலைதளத்தில் வெளியிட்டனர்.

27 வயதிலேயே அவர் உயிரிழந்தது திரையுலகிலும் ரசிகர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நலம் நலமறிய..!

மருத்துவ குறிப்புகள்



## நரம்பு மண்டலத்தின் நண்பன்... இந்தக் காயில் ஜீஸ்; குடிச்சா அம்புட்டு பலன்!



கொத்தவரங்காய் நரம்பு மண்டலத்திற்கு பலம் அளிக்கிறது. மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவும். கொத்தவரங்காய் ஜூஸ் எப்படி செய்வது என்று பார்ப்போம்

கொத்தவரங்காயில் உள்ள கிளைக்கோ நியூட்ரியன்கள் இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. இதில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், இரத்த சர்க்கரை அளவை மெதுவாக உயர்த்தி, நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. இதில் உள்ள நார்ச்சத்து மற்றும் பொட்டாசியம் சத்து இதயத்திற்கு நன்மை பயக்கிறது.

கெட்ட கொழுப்பின் அளவைக் குறைத்து, இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி, இதய நோய்கள் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கிறது. கொத்தவரங்காய் ஜூஸ் எடை குறய உதவுகிறது. கால்சியம் அதிகம் உள்ளதால் எலும்புகளை பலப்படுத்தவும். மேலும் கர்ப்பிணி பெண்கள் கர்ப்பமடைந்த நாளிலிருந்து வாரம் இரண்டு முறை எடுத்துக் கொள்ளலாம்.

கொத்தவரங்காய் நரம்பு மண்டலத்திற்கு பலம் அளிக்கிறது. மன அழுத்தத்தைக் குறைக்கவும் உதவும். கொத்தவரங்காய் ஜூஸ் எப்படி செய்வது என்று பார்ப்போம்

**கொத்தவரங்காய் ஜீஸ் செய்முறை**

தேவையான பொருட்கள்:

கொத்தவரங்காய் – தேவையான அளவு

எலுமிச்சை சாறு – அரை பழம்

தேன் – 1 டீஸ்பூன்

தண்ணீர் – தேவையான அளவு

**செய்முறை:**

கொத்தவரங்காயை நன்கு கழுவி, பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். நறுக்கிய காயை மிக்ஸி ஜாரில் போட்டு, சிறிது தண்ணீர் சேர்த்து முதற்கட்டமாக அரைக்கவும். பின்னர் மீண்டும் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி நைஸாக அரைத்து, வடிகட்டி மூலம் சாற்றைப் பிரித்தெடுக்கவும். வடிகட்டிய சாறில் அரை எலுமிச்சம்பழச் சாறு மற்றும் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து பருகலாம். நாட்டு மருந்து சாப்பிட்டுப் பத்தியம் இருப்பவர்கள் இந்த கொத்தவரங்காய் ஜூஸை உட்கொள்ளக் கூடாது.

(பொறுப்பு துறப்பு: இந்தக் கட்டுரை பொது தளத்தில்/ நாங்கள் தொடர்பு கொண்டு பேசிய நிபுணர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் குறிப்பிட்டு இருப்பதை நீங்கள் கடைபிடிக்கும் முன், உங்கள் குடும்ப மருத்துவர் அல்லது உங்கள் உடல்நலப் பயிற்சியாளரை அணுகும்படி கேட்டுக் கொள்கிறோம்.)

## பீகார் சிவன் கோவிலில் கூட்டநெரிசல் - 7 பேர் பலி!






பீகார், ஆக. 17–

பீகார் மாநிலம் லஹிசாராய் மாவட்டத்தில் அசோக்தாம் என்ற சிவன் கோவில் அமைந்துள்ளது.

புனித ஸ்ராவன் மாதத்தில் மூன்றாம் திங்களான காலையிலேயே சிவனை தரிசித்து ஜல அபிஷேகம் செய்ய ஆயிரக்கணக்கான பக்தர்கள் அசோக்தாம் கோவிலில் திரண்டனர்.

காலை 6.30–6.45 மணியளவில் சுமார் 50,000 பக்தர்கள் கோவிலில் திரண்டிருந்த நிலையில் அருகில் இருந்த மின்சார கம்பம் சாய்ந்து மின்கம்பி அறுந்து விழுந்துள்ளது. கரண்ட் ஷாக் அடித்துவிடும் என்ற அச்சத்தால் ஏற்பட்ட பீதியில் மக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள சிதறி ஓடத் தொடங்கினர்.

இதன்போது பலர் கூட்ட நெரிசலுக்கு இடையில் சிக்கி கீழே விழுந்தனர். அவர்களை மற்றோர் ஏறி மிதித்துச் சென்றனர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த காவல்துறை மற்றும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் மீட்பு பணியில் ஈடுபட்டனர். மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த பாதுகாப்பு அதிகாரிகள் வரவழைக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு லஹிசாராய் சர்தார் மருத்துவமனையிலும் அருகில் உள்ள மற்ற மருத்துவமனைகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை இந்த சம்பவத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் என முதற்கட்ட அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 12 பேர் படுகாயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக சிலர் காவலில் எடுக்கப்பட்டுள்ளனர். கோவில் வளாகத்தை கட்டுப்பாட்டில் எடுத்த காவல்துறை பக்தர்கள் கூட்டத்தை கட்டுப்படுத்தி வருகிறது.

இந்த சம்பவம் நடந்த சூழ்நிலை ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலதிக தகவல் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## யுஜிசி நெட் தேர்வில் குளறுபடிகள்.. 3 பாடங்களுக்கு மறுதேர்வு அறிவித்த தேசியத் தேர்வு முகமை!!



புதுடெல்லி, ஆக. 17–

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு சர்ச்சையைத் தொடர்ந்து, தேசிய தேர்வு முகமை ஜூன் மாதத்தம் நடத்திய யுஜிசி நெட் (UGC NET) தேர்வில் நடந்த குளறுபடி வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஆங்கிலம், வணிகவியல், மற்றும் சமூகவியல் வினாத்தாள்களில் தவறுகள் கண்டறியப்பட்டதை அடுத்து அந்த மூன்று பாடங்களுக்கு மீண்டும் மறுதேர்வு நடத்தப்படும் என தேசிய தேர்வு முகமை (NTA) அறிவித்துள்ளது.

நிபுணர் குழு நடத்திய ஆய்வில் வினாத்தாளில் பல்வேறு குளறுபடிகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

வழங்கப்பட்ட தகவல்களில் தவறுகள் மற்றும் அச்சடிப்புப் பிழைகள், மொழிபெயர்ப்பு தவறுகள் மற்றும் இலக்கணப் பிழைகள் இருந்துள்ளன. முக்கிய அறிஞர்களின் பெயர்கள் மற்றும் புத்தகங்களின் பெயர்கள் விடுபட்டிருந்தது.

கேள்விகளின் வாக்கிய அமைப்பில் தவறுகள் மற்றும் எண்களில் குளறுபடி, தெளிவில்லாத விடைகள் மற்றும் ஒரே கேள்விகள் மீண்டும் மீண்டும் கேட்கப்பட்டது. இத்தனை தவறுகள் இருப்பதால், சில கேள்விகளை மட்டும் நீக்கிவிட்டு மதிப்பெண் வழங்குவது சாத்தியமில்லை என்பதால் மறுதேர்வு நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாக என்டிஏ தெரிவித்துள்ளது.

செப்டம்பர் 9 அன்று காலை ஆங்கிலம், மதியம் வணிகவியல், செப்டம்பர் 10 காலை சமூகவியல் மறுதேர்வு நடைபெறும் என என்டிஏ அறிவித்துள்ளது.

காலை தேர்வு 9:00 – 12:00 மணி வரையும் மதியம் 3:00 – 6:00 மணி வரையும் தேர்வு நடைபெறும் மறுதேர்வு

மறுதேர்வை எழுதும் மாணவர்களிடம் இருந்து எந்தக் கூடுதல் கட்டணமும் வசூலிக்கப்படாது.

மறுதேர்வு அறிவிக்கப்பட்ட மூன்று பாடங்களை தவிர்த்து மீதமுள்ள 84 பாடங்களுக்கான தற்காலிக விடைக்குறிப்பை என்டிஏ வெளியிட்டுள்ளது.

மாணவர்கள் விடைக்குறிப்பு தொடர்பான தங்களின் ஆட்சேபனைகளை ஆகஸ்ட் 18 அன்று இரவு 11:59 மணி வரை பதிவு செய்யலாம். ஒரு கேள்விக்கு ஆட்சேபனை தெரிவிக்க ரூ.200 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணி மற்றும் இளநிலை ஆய்வு உதவித்தொகை (JRF) பெறுவதற்கான தகுதியை நிர்ணயிக்கவும், Phd சேர்க்கைக்கான தகுதியை உறுதிப்படுத்தவும் யுஜிசி நெட் தேர்வு ஆண்டுதோறும் இருமுறை நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## காவல்துறை ஆள்சேர்ப்பு தள்ளிவைப்பு!




சென்னை, ஆக. 17–

தமிழக காவல்துறையில் ஆள் பற்றாக்குறை காரணமாக போலீசாருக்கு வார விடுமுறை தருவதில் சிக்கல் நீடித்து வந்த நிலையில், கடந்த 2021–ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது, 'காவல் துறையில் பணிபுரியும் இரண்டாம் நிலை காவலர்கள் முதல், சப்–இன்ஸ்பெக்டர்கள் வரையிலானவர்களுக்கு, வார விடுமுறை தரப்படும்' என தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

அந்த அரசாணையின்படி போலீசாருக்கு, சென்னை, திருச்சி, கோவை, மதுரை போன்ற பெரு நகரங்களில், வார விடுமுறை தரப்பட்டு வந்தாலும், மாவட்டங்களில், பணியாளர் பற்றாக்குறை காரணமாக, போலீசாருக்கு வார விடுமுறை தருவது, முடியாத காரியமாகிவிட்டது. இது தொடர்பாக, கடந்த ஆண்டு, சென்னை ஐகோர்ட்டு மதுரை கிளையில் காவலர் ஒருவர் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணையின்போது, 'போதிய எண்ணிக்கையில் காவலர்கள் இல்லாததால், அரசாணையை நடைமுறைப்படுத்த முடியவில்லை' என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அப்போது, 'இந்த நடைமுறை சிக்கலை அரசாணை பிறப்பிக்கும் முன் யோசித்து இருக்க வேண்டும்' என்று தெரிவித்த நீதிமன்றம், போலீசாருக்கு வார விடுமுறை தராததால், அவர்களின் குடும்பத்தாரும் பாதிக்கப்படுவதால், அரசாணையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டது.

தமிழகத்தில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையிலும், போலீசாருக்கு வார விடுமுறை தருவதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருவதாக கூறப்படுகிறது. இது குறித்து போலீசார் தரப்பில் கூறுகையில், "காவல்துறையில் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை, 10 ஆயிரத்தை தாண்டிவிட்டது. இதனால், இரண்டாம் நிலை காவலர்கள் முதல் எஸ்.ஐ.,க்கள் வரை, 65,000 பேர் மட்டுமே, பணிபுரிந்து வருகின்றனர். காவல்துறைக்கு புதிதாக ஆட்கள் தேர்வு செய்வதை, அடுத்த ஆண்டுக்கு தள்ளி வைத்துள்ளனர். இதனால், எங்களுக்கு பணிச்சுமை அதிகரித்துவிட்டது. பல மாவட்டங்களில், போலீசாருக்கான வார விடுமுறை நிறுத்தப்பட்டு விட்டது" என்று தெரிவித்துள்ளனர்.

## குழந்தைகளுக்கான ஆடைகள், உள்ளாடைகளின் விலை உயர்வு!




திருப்பூர், ஆக.17–

திருப்பூரில் 2,500–க்கும் மேற்பட்ட பின்னலாடை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 5 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை பெற்று வருகின்றனர். பின்னலாடை நிறுவனங்கள் மூலம் உள்ளாடைகள், டி–ஷர்ட் கள், டிராக் பேண்டுகள், இரவு நேரங்களில் அணியும் ஆடைகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான ஆடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

திருப்பூர் பின்னலாடை மூலம் ஆண்டுக்கு ரூ.70 ஆயிரம் கோடி வருமானம் ஈட்டப்படுகிறது. அதாவது, உள்நாட்டு விற்பனை சந்தை மூலம் ரூ.27 ஆயிரம் கோடியும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் சுமார் ரூ.42,500 கோடி முதல் ரூ.45,000 கோடி வரையிலும் வருமானம் பெறப்படுகிறது. மூலப்பொருள் மற்றும் உற்பத்தி செலவுகளில் தொடர்ந்து ஏற்பட்டுள்ள உயர்வு காரணமாக உள்ளாடைகள், இரவு நேரங்களில் அணியும் ஆடைகள், குழந்தைகளுக்கான ஆடைகள் ஆகியவற்றின் விலை 5 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இதுகுறித்து திருப்பூரில் உள்ள தென்னிந்திய உள்ளாடை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:–

பருத்தி விலை ஒரு கேண்டி (355 முதல் 356 கிலோ) ரூ.74 ஆயிரத்தை எட்டியுள்ளது. கடந்த 3 மாதங்களில் மட்டும் பின்னலாடைக்குரிய நூல் விலை கிலோவுக்கு 170 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. மேலும் தொழிலாளர் கூலி, சாயம் பூசுதல், எலாஸ்டிக், பதப்படுத்துதல், தையல் மற்றும் போக்குவரத்துக்கான கட்டணங்களும் அதிகரித்துள்ளன. இது உற்பத்தியாளர்கள் மீது கூடுதல் சுமையை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த உற்பத்தி செலவு சுமார் 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக உள்ளாடைகளின் விலையை முதலில் 10 சதவீதம் உயர்த்தலாம் என முடிவெடுத்தோம். உள்நாட்டு சந்தையில் தேவை குறைவாக இருந்ததால், முழு விலை உயர்வையும் நுகர்வோர் மீது சுமத்துவது கடினமாக இருந்தது. இதனால், விலை உயர்வு 5 சதவீதமாக மாற்றியமைக்கப்பட்டது. உள்நாட்டு சந்தைக்கான உள்ளாடைகள் பொதுவாக சுமார் 90 சதவீதம் பருத்தி மற்றும் 10 சதவீதம் செயற்கை இழை ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. வெளி ஆடைகளை பொறுத்தவரை, பருத்தி இருப்பு குறைந்ததால் 5 மாதங்களுக்கு முன்பு உற்பத்தியாளர்கள் செயற்கை இழையின் அளவை 50 சதவீதத்தில் இருந்து 70 சதவீதமாக உயர்த்தி உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர்.

பண்டிகை கால தேவையை பூர்த்தி செய்யவும், 38 நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தங்களைப் பயன்படுத்திக்கொள்ளவும் நூல், பருத்தி மற்றும் பிற மூலப்பொருட்களின் தடையற்ற உள்நாட்டு வினியோகத்தை உறுதி செய்ய மத்திய அரசை வலியுறுத்தி உள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினார்.

## விசிக மாநாடு: உளுந்தூர்பேட்டையில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை!



சென்னை, ஆக. 17–

விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை ராதாகிருஷ்ணன் நகரில் ஆக. 17 (திங்கட்கிழமை) மதியம் 2.15 மணிக்கு நடக்கிறது. தொடர்ந்து மாநாட்டில் தீர்மானங்கள் வாசிக்கப்பட உள்ளன. இதையடுத்து 4 முன்னணி தலைவர்களின் உரை, இடம் பெறுகிறது. பின்னர் 3.30 மணி முதல் 4.30 மணி வரை கட்சியின் தலைவர் திருமாவளவன் பேரூரை ஆற்றுகிறார்.

திருமாவளவன் தொண்டர்களை சந்திப்பதற்காக 'ரேம்ப் வாக்' செல்லும் வகையில் சுமார் 700 அடி நீள நடைமேடை அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர அம்பேத்கர், பெரியார், காமராஜர், அண்ணா உள்ளிட்ட தலைவர்களின் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் அலங்கார வளைவுகள், கட்சி கொடிகள் அமைக்கும் பணி உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனால் உளுந்தூர்பேட்டை பகுதி முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது. இந்த நிலையில், விசிக மாநாட்டையொட்டி மாணவர்கள் நலன், போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு உளுந்தூர்பேட்டை நகரத்தில் உள்ள அனைத்து அரசு, தனியார் பள்ளி, கல்லூரிகளுக்கும் ஒருநாள் விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர் பத்மஜா உத்தர விட்டுள்ளார். வி.சி.க. மாநாட்டுக்காக பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதால் சர்ச்சையை கிளப்பி உள்ளது.

## ராகுல்காந்தி மீதான சொத்து குவிப்பு வழக்கில் விசாரணை!

புதுடெல்லி, ஆக. 17–

கர்நாடகாவை சேர்ந்த விக்னேஷ் ஷிஷிர் என்ற பா.ஜனதா பிரமுகர், அலகாபாத் ஐகோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்தார். மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி வருமானத்துக்கு பொருந்தாதவகையில் சொத்து சேர்த்த புகார் குறித்து சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத்துறை விசாரணைக்கு உத்தரவிடுமாறு அவர் கோரியிருந்தார்.

அதை விசாரித்த ஐகோர்ட்டு, குற்றச்சாட்டுகளை சரிபார்க்குமாறு சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத்துறைக்கு உத்தரவிட்டது. அந்த உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் ராகுல்காந்தி மேல்முறையீடு செய்தார். அந்த மனு, தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு இன்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு வருகிறது.

## வேலை வாய்ப்பு

### விளையாட்டு வீரர்களே... 85 காலியிடங்கள்! வருமான வரித்துறையில்!




புனே வருமான வரித்துறையில் விளையாட்டு வீரர்களுக்கான 85 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. மத்திய அரசு பணியில் சேர விரும்பும் தகுதியான விளையாட்டு வீரர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாகும்.

நிறுவனம்: வருமான வரித்துறை, புனே

பணியிடங்கள்: 85

பணி: Sports Person பணியிடங்கள்

பணி வகை: மத்திய அரசு பணி நிரந்தர அடிப்படையில்

பணியிடம்: புனே

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் – https://www.itsportsrecruitmentpune.com/

விண்ணப்ப தொடக்கம்: 15.08.2026

கடைசி நாள்: 15.09.2026

**முக்கிய குறிப்பு**

தகுதி, வயது வரம்பு, விளையாட்டு தகுதி, ஊதியம், தேர்வு முறை மற்றும் பிற நிபந்தனைகள் குறித்த முழு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

## ரப்பர் விலையில் புதிய உச்சம்!



நாகர்கோவில், ஆக. 17–

இந்தியாவில் கேரள மாநிலமும், தமிழகத்தில் குமரி மாவட்டமும் ரப்பர் சாகுபடியில் முதன்மையாக இருக்கிறது. குமரி மாவட்டத்தில் ஏறக்குறைய 25 ஆயிரம் ஹெக்டரில் ரப்பர் சாகுபடி நடைபெறுகிறது. பொதுவாக ரப்பரின் விலை ஏற்ற, இறக்கங்களை சந்தித்து வந்துள்ளது. அதாவது கடந்த 2010–ம் ஆண்டு கிலோ ரூ.255 என்ற உச்சத்தைத் தொட்டது. பிறகு மீண்டும் 200–க்கும் கீழ் வந்தது.

15 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது ரப்பரின் விலை புதிய உச்சத்தை தொட்டது. கிலோ ரூ.275 என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. ரப்பரின் இந்த விலை உயர்வுக்கு உலக அளவில் ஆட்டோ மொபைல் துறையில் ஏற்பட்டுள்ள விற்பனை புரட்சி, போர் காரணமாக கச்சா எண்ணெய்யின் விலையேற்றம் மற்றும் முக்கிய ரப்பர் உற்பத்தி நாடுகளான தாய்லாந்து, மலேசியா மற்றும் இந்தியாவில் ரப்பருக்கான உற்பத்திச் செலவு அதிகரிப்பு காரணம் என கூறப்படுகிறது.

இந்த விலையேற்றம் விவசாயிகள் மத்தியில் தித்திப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலும் உள்ளனர்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 2-ம் கட்ட கலந்தாய்வு 24-ந் தேதி தொடக்கம்!



கோவை, ஆக. 17–

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் கடந்த ஜூலை 3–ந் தேதி தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்பிறகு வேளாண்மை படிப்புகளுக்கான இணைய வழி கலந்தாய்வு 9–ந் தேதி தொடங்கியது. இதேபோல் அரசுப் பள்ளிகளில் படித்த 7.5 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கைக்கு விண்ணப்பித்த மாணவ, மாணவிகளுக்கான சான்றிதழ் சரி பார்ப்பு மற்றும் சேர்க்கை ஆணை வழங்கும் பணி கடந்த மாதம் 20–ந் தேதி நடைபெற்றது.

7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் மொத்தமுள்ள 424 இடங்களில் தற்போது வரை 202 இடங்கள் நிரம்பி உள்ளன. மீதி 222 இடங்கள் காலியாக உள்ளன. பொது கலந்தாய்வில் மொத்தம் உள்ள 5,236 இடங்களில் 4,124 இடங்கள் நிரம்பின. 1,112 இடங்கள் காலியாக உள்ளன. காலியாக உள்ள இடங்களுக்கான கலந்தாய்வு வருகிற 24–ந் தேதி தொடங்கி 27–ந் தேதி வரை நடைபெறுகிறது. இதற்கான அழைப்பு மாணவ–மாணவிகளுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. கலந்தாய்வில் குறிப்பிட்ட தேதிகளில் மாணவ– மாணவிகள் தகுந்த சான்றித ழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும். இந்த தகவலை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தெரிவித்து உள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.


Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




மக்கள் தள்ளாா, ஆட்சி செல்லும்!

# எம்எல்ஏவாக பதவியேற்றார் பிரசாந்த் கிஷோர்!

பீகார், ஆக. 17–

பிகார் சட்டப்பேரவையில் பாங்கிப்பூர் தொகுதி எம்எல்ஏவாக பிரசாந்த் கிஷோர் திங்கள்கிழமை பதவியேற்றுக் கொண்டார்.

பேரவைத் தலைவர் பிரேம் குமார் முன்னிலையில் அவர் உறுதிமொழி எடுத்து எம்எல்ஏ–வாக பதவியேற்றார். பங்கிப்பூர் தொகுதி பாஜக தேசிய தலைவர் நிதின் நவீனின் தொகுதியாகும்.

நிதின் நவீன் மாநிலங்களவை உறுப்பினராக ஆவதற்கு தனது பங்கிப்பூர் தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜிநாமா செய்தார். இதையடுத்து அங்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் முதல்முறையாக போட்டியிட்ட ஜன் சுராஜ் கட்சியின் நிறுவனர் பிரசாந்த் கிஷோர் வெற்றி பெற்றுள்ளார்.

இதன் மூலமாக பிகாரில் பிரசாந்த் கிஷோர் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்திருந்தார்.



# தமிழகத்தில் ‘விபி ஜி ராம் ஜி’ திட்டத்தின் கீழ் நீர்நிலைகள் தூர்வாரும் பணி தொடக்கம்!

சென்னை, ஆக. 17–

தமிழகத்தில் ‘விபி ஜி ராம் ஜி’ திட்டத்தின் கீழ் நீர்நிலைகள் தூர்வாரும் பணிகள் திங்கள்கிழமை தொடங்கவுள்ளன. வளர்ச்சியடைந்த பாரதம்–கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டத்தின் (விபி ஜி ராம் ஜி) கீழ், தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 10,185 வரத்துக் கால்வாய்கள் மற்றும் 809 ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகள் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.



வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக நீர்நிலைகள் மற்றும் வரத்து, பாசனக் கால்வாய்களைத் தூர்வாரி புனரமைப்பதன் மூலம், மழைநீரை முழுமையாகச் சேமித்து, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதுடன், விவசாயப் பாசன வசதிகளையும் மேம்படுத்த முடியும். மேலும், அதீத மழைப்பொழிவு ஏற்படும் காலங்களில் விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளையும் தடுக்க முடியும். ரூ.500 கோடியில் மேற்கொள்ளப்படும் இந்தப் பணிகள், தமிழகத்தின் கிராமப்புற நீர்வளத்தைப் பாதுகாத்து மேம்படுத்தும் முக்கியமான முன்னெடு ப்பாகும். முதல்வர் விஜய் அறிவுறுத்தலின்பேரில், தமிழகத்தின் கிராமப்புற நீர்நிலைகளைப் பாதுகாத்து, நீர்வளத்தை மேம்படுத்தும் இந்த மாபெரும் பணியில், அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிராம மக்கள் மற்றும் தன்னார்வலர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என நீர்வளத் துறை அமைச்சர் என்.ஆனந்த் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பி.எஸ்.என்.எல். 5ஜி வெளியீடு குறித்த முக்கிய அப்டேட்!

அரசு தொலைத்தொடர்பு நிறுவனமான பி.எஸ்.என்.எல். (BSNL), இந்த ஆண்டு 5ஜி மொபைல் சேவைகளை அறிமுகப்படுத்த தயாராகி வருகிறது; இதற்கான காலக்கெடுவாக டிசம்பர் மாதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




பி.எஸ்.என்.எல்.–இன் கேரள பிரிவு தலைமை பொது மேலாளர் (CGM) சாஜி குமார் வெள்ளிக்கிழமையன்று செய்தியாளர்களிடம் பேசும் போது, நிறுவனத்தின் தற்போதைய 4ஜி கட்டமைப்பு ஏற்கனவே “5ஜி–க்கு தயாராக” (5G–ready) இருப்பதால், அடுத்த தலைமுறை சேவைக்கு எளிதாக மாற முடியும் என்று தெரிவித்தார்.

“5ஜி–க்கு மாறுவதற்கு மென்பொருள் மேம்படுத்தல்கள் மட்டுமே தேவைப்படும். உள்நாட்டு தொழில்நுட்பத்தை கொண்டு உருவாக்கப்பட்ட எங்கள் 5ஜி நெட்வொர்க்கின் சோதனையை நாங்கள் ஏற்கனவே தொடங்கிவிட்டோம். இருப்பினும், அடுத்த தலைமுறைக்கு மேம்படுத்துவதற்கு முன், எங்களின் தற்போதைய 4ஜி நெட்வொர்க் முதலில் நிலைபெற வேண்டும்.

5ஜி சேவையை அறிமுகப்படுத்துவதற்கான காலக்கெடுவாக டிசம்பர் 2026 எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது,” என்று பி.எஸ்.என்.எல். பொது மேலாளர் சாஜி குமார் கூறினார். 86 லட்சம் மொபைல் சந்தாதாரர்களை கொண்ட பி.எஸ்.என்.எல்.–இன் கேரளப் பிரிவில், 5ஜி–க்கு எளிதாக மேம்படுத்தக்கூடிய சுமார் 7,200 4ஜி மொபைல் டவர்கள் உள்ளன என்று சாஜி குமார் மேலும் தெரிவித்தார். 4ஜி கட்டமைப்பை வலுப்படுத்த நாடு முழுவதும் நிறுவப்பட்டு வரும் 26,300 புதிய மொபைல் டவர்களாலும் மாநிலம் பயனடையும்.

மாநிலத்தின் தொலைதூர பகுதிகளில் சேவை வரம்பை மேம்படுத்த, போதிய சேவை இல்லாத இடங்களில் 323 டவர்களையும், லட்சத்தீவில் மேலும் 37 டவர்களையு பி.எஸ். என்.எல். நிறுவ உள்ளது.

மாநிலத்தில் தனது IMS (IP Multimedia Subsystem) திறனை பி.எஸ்.என்.எல். மேம்படுத்தியுள்ளதாகவும், இது குறிப்பாக காலை 11 மணி முதல் மதியம் 12 மணி வரையிலான அதிகப்படியான பயன்பாட்டு சுமையைக் கையாள உதவும் என்றும் தலைமைப் பொது மேலாளர் தெரிவித்தார்.

முன்னதாக பி.எஸ்.என்.எல். நிறுவனம் சுதந்திர தினத்தை முன்னிட்டு, வாடிக்கையாளர்களுக்காக பல கவர்ச்சிகர திட்டங்களை அறிவித்தது. இவற்றில் ‘Re. 1 Freedom 2.0’ திட்டம், மாதத்திற்கு ரூ. 1,111 என்ற அறிமுகச் சலுகையுடன் கூடிய ‘Fibre Freedom Plan’, மற்றும் வருடாந்திர ப்ரீபெய்ட் திட்டங்களில் கூடுதல் வேலிடிட்டி ஆகியவை அடங்கும்.






80 ஆவது, சுதந்திர தினவிழாவை முன்னிட்டு மதுரை கஸ்தூரிபாய் காந்தி மாநகராட்சி பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் தலைமை ஆசிரியர் பாலுமணி தலைமையில் கொடி ஏற்றிட உதவி தலைமை ஆசிரியர் ரீட்டா வரவேற்று பேசிட நிலா சேவை மைய அறக்கட்டளை நிறுவனர் கவிக்குயில் இரா.கணேசன் சிறப்பாளராக கலந்து கொண்டு கலைநிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவிகளுக்கும், முன்னால் இரணுவ வீரர்களின் புதல்விகளான ஆசிரியர்களுக்கும்பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார் விழாவை கணித ஆசிரியர் ஆனந்தி தொகுப்பு வழங்கிட தமிழாசிரியர் ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

# மதுபானக் கொள்கை வழக்கு: சிபிஐ மனு மீது விசாரணை!

புதுடெல்லி, ஆக. 17–

மதுபானக் கொள்கை வழக்கில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர்களான அரவிந்த் கேஜரிவால், மனிஷ் சிசோடியா மற்றும் 21 பேரை விடுவித்த விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து சிபிஐ தாக்கல் செய்த மனுவை தில்லி உயர் நீதிமன்றம் இன்று விசாரிக்க உள்ளது.



மேலும், சிபிஐ தாக்கல் செய்துள்ள மறுஆய்வு மனு விசாரணைக்கு உகந்ததல்ல எனக் கூறி, அதனைத் தள்ளு படி செய்யக் கோரி தில்லியின் முன்னாள் முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் தாக்கல் செய்துள்ள மனுக்களையும் நீதிபதி மனோஜ் ஜெயின் விசாரிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிபதி ஸ்வரண காந்தா சர்மா முன்னிலையில் நடைபெற்ற இந்த வழக்கின் விசாரணையை முன்னதாகப் புறக்கணித்திருந்த கேஜரிவாலும் சிசோடியாவும், இந்த மனு ‘முன்னெப்போதும் இல்லாத அவசரத்திலும்‘ மற்றும் ‘மிகவும் அலட்சியமான முறை யிலும்‘ தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் ‘ சிபிஐயின் வழக்கை தங்களால் புரிந்துகொள்ளக்கூட முடியவில்லை என்றும் கூறியுள்ளனர்.

‘சிபிஐ இந்த மறுஆய்வு மனுவை முன்னெப்போதும் இல்லாத அவசரத்துடனும், மிகவும் அலட்சியமான முறையிலும் தாக்கல் செய்துள்ளது. சிறப்பு நீதிபதி விடுவிப்பு உத்தரவைப் பிறப்பித்த நான்கு மணி நேரத்திற்குள் இந்த மறுஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 500 பக்கங்களுக்கும் மேலாக நீளும் அந்த விடுவிப்புத் தீர்ப்பில் சிறப்பு நீதிபதி கண்டறிந்த முடிவுகளை சிபிஐ மதிக்கவில்லை என்பதை வெளிப்படையாகக் காட்டுகிறது,‘ என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

கடந்த முறை, சிபிஐ–யின் மனுவுக்கு இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்க கேஜரிவால், சிசோடியா மற்றும் துர்கேஷ் பதக் ஆகியோருக்கு நீதிபதி ஜெயின் இறுதி வாய்ப்பை வழங்கியிருந்தார்.

பிப்ரவரி 27 அன்று, மதுபானக் கொள்கை தொடர்பான வழக்கில், தில்லியின் முன்னாள் முதலமைச்சர் கேஜரிவால், முன்னாள் துணை முதல்வர் சிசோடியா மற்றும் 21 பேரை விசாரணை நீதிமன்றம் விடுவித்தது. அந்த வழக்கு நீதித்துறை ஆய்வில் தாக்குப்பிடிக்க இயலாதது என்றும், முழுமையாக நம்பகத்தன்மையற்றது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தனது மறுஆய்வு மனுவில், இந்த விடுவிப்பு உத்தரவு வெளிப்படையாக சட்டவிரோதமானது, தவறானது மற்றும் வெளிப்படையான பிழைகளைக் கொண்டது என்று சிபிஐ கூறியுள்ளது.

குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும் கட்டத்திலேயே விசாரணை நீதிமன்றம் ஒரு குறு விசாரணையை நடத்தியதாகவும், ‘வழக்குத் தரப்பின் வாதத்தை ஒருதலைப்பட்சமாகப் படித்து‘ விடுவிப்பு உத்தரவைப் பிறப்பித்ததாகவும் அந்த மனுவில் வாதிடப்பட்டுள்ளது.

விசாரணை நீதிமன்றம் வழக்கின் உண்மைகளைப் புரிந்துகொள்ளத் தவறியது மட்டுமல்லாமல், புலனாய்வு அமைப்பு மற்றும் புலனாய்வு அதிகாரிக்கு எதிராக தேவையற்ற பாதகமான கருத்துக்களையும் தெரிவித்ததாக அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.




## முதியோர் இல்லத்தில் சுதந்திர தின விழா

- தேசியக்கொடி ஏற்றி இனிப்பு வழங்கல்
- மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம் சிறப்புரை







திருநகர் மாநகராட்சி 94 ஆவது வார்டு மாமன்ற அலுவலகம் வளாகத்தில் உள்ள கேர் என் லிப்ட் பவுண்டேஷன் என்ற அமைப்பின் நிர்வாகத்தில் உள்ள வீடற்ற ஏழைகள் இல்லத்தில் நேற்று முன்தினம் காலை சுதந்திர தின விழர சிறப்பாக நடைபெற்றது. திருநகர் டவுன் லயன்ஸ் கிளப் தலைவர் ஐசக் முத்துராஜ் தலைமை வகித்தார். பொருளாளர் ரெங்கராஜ் முன்னிலை வகித்தார். திருநகர் மூத்த முன்னோடி டி. பாலச்சந்திரன் வாழ்த்துரை வழங்கினார்.

கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து இனிப்பு வழங்கி “மனிதகுல மேன்மை” என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

அவர் பேசுகையில், “இன்று பாரத நாட்டில் மகிழ்ச்சி, வளம், சுய தேவை, விஞ்ஞானம், பாதுகாப்பு என அனைத்து துறைகளினும் வளர்ந்து உறுதியாக உள்ளோம். இதற்கெல்லாம் நமது முன்னோர்கள் விதை போட்ட திருநாள் இது.

சில ஆண்டுகளுக்கு முன்பு கொரோனா எனும் அச்சம் உலகம் முழுவதும் உள்ள மக்களை அச்சப்படுத்தியது. அப்போது நம்மைக் காக்கும் பணியில் அயராது உழைத்த மருத்துவப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்களுக்கு இந்த நாளில் மனதார நன்றி சொல்ல வேண்டும்.

அதன் நீட்சி தான் உலகில் நமது தனித்தன்மை கண்டு வல்லரசுகள் இன்றும் வியக்கின்றன. அடிமை நிலை மாறி அனைத்து மக்களும் உயர்நிலை பெற்று மகிழ்வுடன் உள்ள ஒரே தேசம் பாரதத் திருநாடு என்பதை எண்ணிப் பெருமிதம் கொள்ள வேண்டும்.

இது போன்ற இல்லங்களில் வாழும் நீங்கள் உங்கள் பிள்ளைகள் நலமுடன் வாழ்ந்திட வாழ்த்துங்கள்” என்றார்.

இல்லப் பணியாளர் சுபாஷ் நன்றி கூறினார்.
இது ஒரு நெகிழ்வான மகிழ்ச்சியான திருநாளாக அமைந்தது.

# விரைவில் திரையரங்குகளில் அஜித் குமார் ரேஸிங் ஆவணப்படம்!



சென்னை, ஆக. 17–

பிலிப் சாரியட் மோட்டார் ஸ்போர்ட் சார்பில் இத்தாலியின் வெனிஸ் நகரத்தில் இந்தாண்டுக்கான ஜென்டில்மேன் ஓட்டுநர் விருது அஜித்துக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து, அஜித் குமார் ரேஸிங் பயிற்சிகள், போட்டிகள், அவரின் பேட்டிகள் ஆகியவற்றை தொகுத்து கிலாடியேட்டர்ஸ் என்கிற பெயரில் ஆவணப்படத்தைத் தயார் செய்துள்ளனர். இதனை, இயக்குநர் ஏ. எல். விஜய் இயக்க, ஜிவி பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார்.

இந்த நிலையில், இந்த ஆவணப்படத்தை வருகிற அக்டோபர் மாதம் திரையரங்குகளில் வெளியிடத் தயாரிப்பு தரப்பு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கான முதல்கட்ட பணிகளும் துவங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# தங்கம் விலை உயர்ந்தது!

சென்னை, ஆக. 17–

தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வரும் நிலையில் வாரத்தின் முதல் நாளான இன்று தங்கம் விலை சவரனுக்கு ரூ. 400 உயர்ந்துள்ளது. அதன்படி, திங்கள்கிழமை காலை தங்கம் கிராமுக்கு ரூ. 50 உயர்ந்து, ரூ.14,270 –க்கும், சவரனுக்கு ரூ. 400 உயர்ந்து, ரூ.1,14,160 –க்கும் விற்பனையாகிறது. கடந்த ஆக. 4 ஆம் தேதி ஒரு சவரன் தங்கம் ரூ.1,05,600 ஆகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது. வெள்ளியின் விலையில் மாற்றமின்றி கிராம் ரூ. 255 –க்கும், ஒரு கிலோ ரூ. 2,55,000 –க்கும் விற்பனையாகிறது.





மதுரை,செல்லூர், அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயிலில்,பக்தர்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றும் முகமாக ,சுத்திக்கரிக்கப்பட்ட குடிநீர் மையம் 17.08.2626–ல் திறந்து வைக்கப்பட்டது. மதுரை “நரசிம்மா” புளுமெட்டல் நிறுவனத்தார் உபயமாக வழங்கியுள்ளார்கள். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020